# <u>In the Court of the District Munsif, Eraniel</u>

**Original Suit No. 136/2006** **Date:25.06.2026.**

**(DW2)- ஜார்ஜ்**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் வட்டார வளர்ச்சி அலுவலராக வேலை பார்த்து ஓய்வு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் வாதி மற்றும் 1 முதல் 3 வரை உள்ள பிரதிவாதியின் சகோதரியின் கணவர் என்றால் சரிதான். 1 முதல் 3 வரை பிரதிவாதிகள் வேறு மாவட்டத்தில் பணி செய்வதால் அந்தந்த மாவட்டங்களில் சொந்த வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி நபர்கள் பட்டிகை சொத்து அல்லாத தனி சொந்த வீட்டில் தான் இருக்கிறார்கள் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் வேறு மாவட்டங்களில் வேலை பார்த்த விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

2. மேற்படி காரணத்தினால் வாதிதான் அவரது தகப்பனாரை கவனித்துக்கொண்டார் என்றால் சரியல்ல, 2 ஆம் பிரதிவாதி தான் ஒரு நபரை அமைத்து அவரது அப்பாவை கவனித்து வந்தார். மேற்படி நபரின் விபரம் தெரியுமா என்றால் பெயர் தெரியாது நபரை தெரியும். பிரதிவாதி அவரது தகப்பனாருக்கு மருத்துவ செலவுகளை செய்ததை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, ஆவணங்கள் உண்டு. வாதியின் தந்தை 2003 ல் வாதிகளுக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ. 1 குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. தந்தையின் சொத்து தங்களுக்கு கிடைக்கவில்லை என்று 2 ஆம் பிரதிவாதி ஜெயசீலன் அவரக்கு கிடைக்கவில்லை என்று வாதியின் தந்தையை 1 முதல் 3 பிரதிவாதிகள் வலுக்கட்டயமாக அழைத்து சென்று வா.சா.ஆ.3 ரத்து ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளனர் என்றால் சரியல்ல, வாதி பிரதிவாதிகளின் தகப்பனாரை கொடுமை படுத்தியதால் ரத்து செய்துவிட்டார். கொடுமைபடுத்திய விபரத்தை வாதியின் தகப்பனார் வா.சாஆ. 3 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளார என்றால் குறிப்பிட்டுள்ளார். வா.சா.ஆ.3 ஆவணத்தில் 2 ஆம் பிரதிவாதி ஜெயசிலன் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். ரத்து பத்திரத்தில் ஜெயசீலன் கையொப்பம் செய்யவில்லை என்று சாட்சி தன்னிசையாக கூறுகிறார்.

4. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் ஜெயசீலன் சாட்சிய கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி நபர் சாட்சி பத்திரத்தில் கையொப்பம் போட்டு இருபது

மேற்படி ஜெயசீலன் அவரை வலுக்கட்டயமாக கடத்தி சென்று வலுக்கட்டயமாக பத்திரத்தை பதிவு செய்தது துலங்குகிறது என்றால் சரியல்ல. வாதியின் தந்தையை வா.சா.ஆ.3 ஆவணம் எழுதுவதற்கு முன்பும் பின்பும் வாதிதான் கவனித்து வந்தார் என்றால் சரிதான். ரத்து பத்திரம் எழுதியப்பின்பும் வாதிதான் கவனித்து வந்தார் என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்படி ஆவணத்தை ரத்து செய்யமுடியாது என்ற நிபந்தனை உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தை ரத்து செய்ய போகும் விபரத்தை அருள்செல்வனுக்கு தெரிவித்தாரா என்றால் தெரிவித்தார். எப்போது தெரிவித்தார் என்றால் தேதி நினைவில்லை ஆனால் ரத்து செய்வதற்கு முன்பே தெரிவித்துவிட்டார். மேற்படி வா.சா.ஆ. 3 ரத்து ஆவணத்தை பதிவு செய்ய சார் பதிவாளருக்கு எந்த அதிகாரமும் கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தை ரத்து செய்ய வேண்டும் என்றால் நீதிமன்ற தீர்ப்பின் படிதான் ரத்து செய்ய முடியும் என்றால் நீதிமன்றத்தின் சார்பாக ஒரு வழக்கறிஞர் வந்து பதிவு செய்து கொடுத்தார்.

6. எனது மாமனாரோ 1 முதல் 3 பிரதிவாதிகளோ மேறப்டி ஆவணத்தை பொறுத்து எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி தெரியாது. தாவா சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் வலுக்கட்டயமாக கட்டுமானங்கள் கட்டியது என்றால் சரியல்ல, ஊர்காரர்கள் மற்றும் சொந்த காரர்கள் வாதி மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனாரிடம் நான்கு மகன்களுக்கும் சம பங்காக சொத்தை பிரித்து கொடுக்கும் படி கூறினோம் அதன் அடிப்படையில் இறந்து போன ெஹன்றி வா.சா.ஆ.3 ஆவணத்தை இயற்றினார். நான் ஒருதலைபட்சமாக 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு சார்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றால் சரியல்ல. வாதி அவரது தந்தை மற்றும் தாய்யை அடித்தார் என்றும் அறையில் அடைத்து வைத்து கொடுமைப்படுத்தினார் என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் அவ்வாறு கொடுமைப்படுத்தியிருந்தால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பார்கள் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

(ஒப்பம்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

இரணியல்.